"SCHOOL VOICE" (Tamil & English, Bi-monthly) R.Dis. No. 1447/2013 TNBIL 03906/22/1/2013-TC



# தமிழக முதல்வர் டாக்டர் அம்மா அவர்களின்

## தலைமையிலான தமிழக அரசின் கடந்த முன்று ஆண்டுகளில் கல்வி ஒதுக்கீடு.





**விலையில்லா நோட்டு புத்தகம்**

**Supply of Note-Books**

| | | | | |
|---|---|---|---|---|
| 2011 - 2012 | - | 81.02 Lakhs | - | 102.69 Cr. |
| 2013 - 2014 | - | 86.71 Lakhs | - | 110.96 Cr. |
| 2014 - 2015 | - | 77.66 Lakhs | - | 106.45 Cr. |
| **Total** | | **250 Crores** | | **318 Crores** |

**விலையில்லா கல்வி உபகரணங்கள்**

**Supply of Educational Kits**

| | | | | |
|---|---|---|---|---|
| 2012 - 2013 | - | 105 Lakhs | - | 147,57 Cr. (School bag) |
| 2013 - 2014 | - | 55,68 Lakhs | - | 20,24 Cr. (Geometry Box) |
| | | 63,91 Lakhs | - | 11,66 Cr. (Color Pencil/Crayons) |
| | | 55,67Lakhs | - | 16,42 Cr. (Atlas) |
| **Total** | | **270 Crores** | | **200 Crores** |
| 2014 - 2015 | - | 131,62 Lakhs | - | 133,97 Cr. |

**விலையில்லா காலணிகள்**

**Supply of Footwear**

| | | | | |
|---|---|---|---|---|
| 2012 - 2013 | - | 84.92 Lakhs | - | 112,66 Cr. |
| 2013 - 2014 | | | | |
| 2014 - 2015 | - | 77,66 Lakhs | - | 120,07 Cr. |
| **Total** | | **160 Crores** | | **132 Crores** |

**விலையில்லா மிதிவண்டி**

**Supply of Bi-Cycle**

| | | | | |
|---|---|---|---|---|
| 2012 - 2013 | - | 6.31 Lakhs | - | 194,20 Cr. |
| 2013 - 2014 | - | 6,30 Lakhs | - | 200,98 Cr. |
| 2014 - 2015 | - | 6,30 Lakhs | - | 216,04 Cr. |
| **Total** | | **20 Crores** | | **600 Crores** |

**இலவச பஸ்பாஸ்**

**Free Bus Passes**

| | | | | |
|---|---|---|---|---|
| 2012 - 2013 | - | 14.02 Lakhs | | |
| 2013 - 2014 | - | 14.02 Lakhs | | |
| 2014 - 2015 | - | 23,73 Lakhs | - | 323 Crores |
| **Total** | | **20,57 Lakhs** | | |

## *VISION - 2013*

**இலவச மடிகணினி**

**Free Laptops - Class +2**

| | | | | |
|---|---|---|---|---|
| 2011 - 2012 | - | 5.31 Lakhs | - | 739,78 Cr. |
| 2013 - 2014 | - | 5.35 Lakhs | - | 898,00 Cr. |
| 2014 - 2015 | - | 5,50 Lakhs | - | 925,01 Cr. |
| **Total** | | **16 Crores** | | **2562 Crores** |

Laptops will be provided to 5.4 Lakh Students for the Fourth consecutive year at a cost of Rs. 1080 Cr.

**இலவச பள்ளி சீருடைகள்**

**Supply of four Set of Uniform**

| | | | | |
|---|---|---|---|---|
| 2011 - 2012 | - | 46.88 Lakhs | - | 196,19 Cr. |
| 2012 - 2013 | - | 47,07 Lakhs | - | 329,88 Cr. |
| 2013 - 2014 | - | 53,54 Lakhs | - | 353,22 Cr. |
| **Total** | | **150 Crores** | | **800 Crores** |

**இலவச பாடப்புத்தகம்**

**Supply of Text Books**

| | | | | |
|---|---|---|---|---|
| 2011 - 2012 | - | 69,25 Lakhs | - | 49,34 Cr. |
| 2012 - 2013 | - | 92,00 Lakhs | - | 206,04 Cr. |
| 2013 - 2014 | - | 97,70 Lakhs | - | 214,72 Cr. |
| **Total** | | **169 Lakhs** | | **450 Crores** |

**Owned & Published by M.J. MARTIN KENNEDY,** M.A., M.Ed., M.Phil., B.L.,
Published at No. 14, Robinson Park Colony, Old Washermenpet, Chennai - 600021.
**Printed by** J. Gowrinathan at Sri Gowri Graphics, New No. 9, Old No. 4/2,
Maniganda 4th Street, Old Washermenpet, Chennai - 600 021.
Editor : **M.J. JOHN AROKIA PRABHU,** M.A., M.Ed., M.Phil., B.L., Phone : 9940051234

R.Dis.No. 1447/2013

# SCHOOL VOICE
# ஸ்கூல் வாய்ஸ்

Tamil & English Bi-monthly Magazine

Volume : 1 Issue : 2 August 2014 Page: 4 Price : Rs.25/-

## From the Presidents Desk....

## திருப்புமுனையாக்கிய திண்டுக்கல் கூட்டம்

திண்டுக்கல் காலை 9.30 மணியளவில் மாவட்ட பள்ளிகளின் கூட்டம் திருவேங்கட சாமி அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இது திருப்புமுனையான கூட்டம் என எல்லோராலும் பரப்பரப்பாக பேசப்பட்டது. கிறிஸ்துதாஸ் ஐயா மறைவிற்குபின், அனைத்து மாவட்ட சங்கப்பொறுப்பாளர்களும், நமது சங்கத்தினை பாராட்டி, நமது சங்கத்தின் பணிகளை பாராட்டி, நமது சங்கத்தில் இணைவதாக வின்னப்பித்தனர்.

ஒரே மாதிரியான Calender அச்சிட்டு தருவது எனவும், மேலும் School voice பற்றியும் விபரங்களை விளக்கினார் நமது தலைவர் ம.ஜே. மார்டின் கென்னடி. மேலும் Less land உள்ள மெட்ரிக் பள்ளிகளும், LPA பற்றியும் விவாதிக்கப்பட்டது. இந்தக் குறைந்த நில அளவு உள்ள மெட்ரிக் பள்ளிகளுக்கும், தனியார் உதவிபெறும் பள்ளிகளுக்கும் குறிப்பாக 2009 ஆம் ஆண்டு கொண்டுவரப் பட்ட RTE 2009 சட்டத்திற்கு முன்பே ஆரம்பிக்கப்பட்டவை என்பதனையும் நினைவில் கொண்டு, 48 G.O, 49 G.O விலிருந்து முழுமையான விலக்களிக்க வேண்டுகிறோம். மேலும் தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர்களோ. Nursery Renewal க்கு CEO வரை கோப்புகளை அனுப்பி தாமதம் செய்கின்றனர். ஆனால் பிற மாவட்டங்களில் DEEO க்களே Renewal வழங்குகின்றனர் அதே முறையே தேனீ மற்றும் திண்டுக்கல் மாவட்ட முதன்மை கல்வி அலுவளர்களும் பிற மாவட்டங்களில் உள்ளது போல நடைமுறைகளில் கடைபிடிக்க வேண்டும்.

கிறிஸ்துதாஸ் அவர்களின் மறைவிற்குபின், எழுச்சியுடன் கூடிய திருப்புமுனை கூட்டம் என்றால் திண்டுக்கல் கூட்டமே என்பதை பாராட்டி, இக்கூட்டத்திற்கு ஏற்பாடு செய்த திண்டுக்கல் மாவட்ட தலைவர் திருவேங்கட சாமி அவர்களை நமது ஸ்கூல் வாய்ஸ் பாராட்டுகிறது. கிட்ட 24 மாவட்டங்களில் பொறுப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் என்பதை மிகுந்த மகிழ்வோடு உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன். தொடர்ந்து "தனியார் பள்ளிகளின் பாதுகாவலர்" கிறிஸ்துதாஸ் வழியில் பயணிக்க உங்களை அன்புடன் அழைக்கிறேன்.

என்றும் கல்விப்பணியில் தங்களுடன்

அன்புடன்
**ம.ஜே. மார்டின் கென்னடி,**
M.A(His.)., M.A.(Eng)., B.Ed., B.L.,
மாநிலத் தலைவர்

## ஆசிரியரின் குரல்

### "வதந்தி..."

உண்மைகுபுறம்பாக செய்திகளை பரபரப்பு செய்தியை ஒலிபரப்பி சென்னையில் பல்லாவரம் பகுதியில் உள்ள புனித தெரச பள்ளியில், இல்லாத ஒரு சங்கிதாவை உருவாக்கி, கற்பழிக்கப்பட்டதாக பொய்யான ஒரு செய்தியை பரப்பி மோசமான சூழ்நிலையை தொலைகாட்சிகள் உருவக்கின காவல்துறையும், கல்வித்துறையும் இந்த செய்தி வதந்தி என்று கூறியும் அதை பொருட்படுத்தாமல் தாங்கள் நடுநிலையான செய்திகளையே, உண்மையான செய்திகளையே ஒலிபறப்புகிறோம் என்று கூறும் தனியாற் தொலைகாட்சிகளும் இந்த தவறான செய்தியை தொடாந்து தங்கள் தொலைகாட்களில் பரபியதால் இந்த செய்திகளை கண்ட பெற்றோர்களும், மற்றும் பெது மக்களும், சில சமூக விரோதிகளும் புனித தெரச பள்ளியை முற்றுகையிட்டு அப்பள்ளியில் பணியாற்றும் ஆசிரியர்களும் பள்ளி நிர்வாகத்தையும் தங்கள் பணிகளை செய்யவிடாமல் அவர்களை துன்பப்படுத்தி மணஉலைச்சலுக்கு ஆளாக்கி போராட்டங்களை நடத்தி அப்பள்ளிக்கு கலங்கத்தை ஏற்படுத்தியதற்கு தமிழ் நாடு நர்சரி மற்றும் பிரைமரி பள்ளிகளின் சங்கத்தின் சார்பாக வண்மையாக கண்டிக்கிறோம்.

சமீபத்தில் போரூர் பள்ளியில் வெடிகுண்டு வைத்ததாக புரளி பரவி வதந்தி தீ யாக பரவி சென்னை பள்ளிகள் அனைத்திற்கும், குறிப்பாக வடசென்னை பள்ளிகள் பல பெற்றோர்களின் வற்புறுத்தல் காரணமாக பள்ளி நேரம் முடியும் முன்பே மூடப்பட்டன. பள்ளி நிர்வாகிகளும், ஆசிரியர்களும், அதற்கும் மேலாக பெற்றோர்களும், மானவர்களும் பல இன்னல்களுக்கு ஆளானார்கள்

இப்படிபட்ட செய்தியை தணியாற் தொலைக்காட்சிகள் உடனே ஒளிபரப்பாமல் உண்மை நிலையை அறிந்து ஒளிப்பரப்பவேண்டும் என்றும் இப்படிப்பட்ட வதந்தியை பறப்பிய சமூகவிரோதிகலை கடுமையாக தண்டிக்க வேண்டும் என்றும் வேண்டுகிறோம்.

அன்புடன்

**ஆசிரியர் ஜான்**
M.A., M.Ed., M.Phil., B.L.,
**வழக்கறிஞர்**
9940051234

## திண்டுக்கல் கூட்டத்தில் நம் பள்ளி நிர்வாகிகள்






# RTE 25% இலவச சேர்க்கைக்கு பணம் திரும்பப்பெறுவது Claim Form கொடுக்கப்பட்டுள்ளது

நமது சங்கத்தின் கோரிக்கையை ஏற்று RTE பணம் திரும்பப்பெருவது தொடர்பாக அரசு உரிய பரிந்துரை படிவங்களை வழங்கியுள்ளது. கிட்டத்தட்ட 2013-14ல் 50,000த்திற்கு மேலாகவும், 2014-15ல் 87,000த்திற்கு மேலாகவும் RTE பணம் கொடுக்க வேண்டியுள்ளது. தமிழக அரசின் தற்போது Claim Form-ஐ கொடுத்து வருகிறது. உடனடியாக பள்ளித்தாளாளர்கள் Claim Form-ஐ உரிய படிவங்களை பூர்த்தி செய்து AEEO, DEEO அல்லது IMS அனுப்பிவைக்கவும். நமது சங்கத்தின் சார்பாகவும், School Voice சார்பாகவும் தமிழ அரசையும், கல்வித்துறை அதிகாரிகளையும் பாராட்டுகிறோம்.

# நாலந்தா பழைய பொலிவை அடையுமா?



நாலந்தா பல்கலைக்கழகம், இந்தியாவின் ஆக்ஸ்போர்டு என்று சொல்லும் அளவு பழமை வாய்ந்த பல்கலைக்கழகம் இதனை பிஹர் மாநில அரசு 7 ஆண்டுகளுக்கு முன் புதிய மசோதா மூலம் புதுப்பிக்க முடிவு செய்தது. தொடர்ந்து மத்திய அரசு நாலந்தா சட்டத்தை கடந்த 4 ஆண்டுகளுக்கு முன் கொணர்ந்தது.

நாலந்தா என்பது நா-அலம்-தா என்ற மூன்று சமஸ்கிறத வார்த்தைகளின் கூட்டுப்பொருள். அதன் பொருள் யாதெனில் "அறிவுக்கொடை" என்பதே ஆகும்.

இராஜ்கீரில் 15 மாணவர்களைக் கொண்டு துவக்கப்பட்டுள்ள இந்த நாலந்தா பல்கலைக் கழகத்திற்கென கடந்த 10 ஆண்டு 2727 கோடி ரூபாய்கள் அதன் வளர்ச்சிக்காக அளிக்கப்பட்டுள்ளன. நாலந்தா பழைய பொலிவை மீண்டும் அடையுமா? நம்பிக்கையோடு ஒவ்வொரு இந்தியரும் காத்திருக்கிறோம்.



# கல்விக்காண ஒதுக்கீடு உயர்வு

2004-05ல் பட்ஜெட்டில் கல்விக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ.11,000 கோடி. 2014-15ல் இத்தொகை சுமார் 82,400 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. 10 ஆண்டுகளில் கல்வி வரி மூலமான வருவாயும் 5000 கோடியாகியது. 2014-15க்கு 40105 கோடியாக உயர்ந்துள்ளது என்பதும் கல்வியின் வளர்ச்சி பாலல் மத்திய மாநில் அரசுகள் கொண்டுள்ள அக்கரையை நமக்கு காட்டுகிறது. நமது ஆசிரியர்குழுவும் அரசின் கல்வி வளர்ச்சிக்கான மத்திய மாநில் அரசுகளின் முயற்சிகளை பாராட்டுகிறது.

## சமச்சீர் கல்வியில் போதிய தரமில்லை

# ஆரம்பக்கல்வி தரமானதாக இருக்கவேண்டும்

**திரு விசுவநாதன் உரை**



சென்னை லயோலா கல்லூரியில் நடைபெற்ற ஆசிரியர் தின விழாவில்,கலந்து கொண்ட VIT நிறுவனர், வேந்தர் விசுவநாதன் கூரிய தகவல்.

இந்தியாவில் மொத்தம் 700 பல்கலைக்கழகங்கள் உள்ளன. ஆனால் உலக தரவரிசையில் ஒன்று கூட இல்லை. ஏனிந்த பிரச்சினை. பிரச்சினை உயர்கல்வியில் இல்லை. ஆரம்பக்கல்வி தரமானதாக இருக்கவேண்டும். சமச்சீர் கல்வியில் போதிய தரமில்லை. எனவே ஆரம்பக்கல்வி பாடத்திட்டம் இன்றைய போட்டி மிகு உலகிற்கு ஏற்றவாறு மாற்றியமைக்கபட வேண்டும்.

பிசா என்ற 73 நாடுகள் கலந்து கொண்ட ஆய்வில், இந்தியாவின் இடம் 70. கடந்த பத்து ஆண்டுகளில் கற்றல் திறன் சரிந்து வருகிறது. ASEC report-ன் படி 2007ல் கழித்தல் கணக்கு 74% தெரிந்திருந்தனர். 2013ல் கழித்தல் கணக்கு 52% ஆகக் குறைந்துவிட்டது. 2007ல் வாசித்தல் 80% தெரிந்திருந்தது. 2013ல் வாசித்தல் 68% ஆண்டு குறைந்துவிட்டது. தமிழகத்தில் 5 ஆம் வகுப்பு மாணவர்கள் 2 ஆம் வகுப்பு பாடங்களை வாசிக்க முடியவில்லை.

கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கும் நாடுகள் பொருளாதாரத்திலும் முன்னேற்றம் அடைந்துள்ளன. பணம் கொடுத்து தொடக்கப்பள்ளி ஆசிரியராக வருபவர்கள், வேறு தொழில் செய்தால்தான் அந்தபணத்தை திரும்பபெற முடியும். இதனால் கல்வியின் தரம் குறைவு படும் என கூறினார்.



# மாணவிக்கள் மீது ஆசிட் வீச்சு



கடந்த 12ம் தேதி மீனா, தங்கஈஸ்வரி ஆகிய இருவரும் பஸ் ஸ்டாண்டிற்கு நடந்து சென்று கொண்டிருந்த போது, மா்ம நபர், ஒருவர் ஆசிட் வீசியதில் படுகாயமடைந்தனர். ஆசிட் வீச்சு தொடர்கதையா? இதை பொறுப்பு மிக்க சமுதாயமும், அரசும் ஒன்றினைந்து எப்படி தடுப்பது? குறிப்பாக இளம்பெண்கள் பள்ளிசெல்லும் பெண்கள், கல்லூரி செல்லும் பெண்கள் இத்தகைய அரக்கத்தமான கொடும் செயலில் ஈடுபடுவோர் ஈவு இரக்கமின்றி கடுமையான தண்டனைகள் தரப்படவேண்டும் என்பதே சமூதாய நோக்கங்களின் விருப்பமாக உள்ளது. சமூகமும், அரசும் நீதித்துறையும் இத்தகைய இழிவு செயல்கள் நடைபெறாவண்ணம் ஒன்றினைந்து ஆவன செய்ய ஸ்கூல் வாய்ஸ் வேண்டுகிறது.



**புதிதாக நமது நிர்வாககுழுவில் இனைக்கப்பட்ட திரு M.V. வினோத் மற்றும் M.N. ரவீந்திரன் ஆகியோருக்கு பாராட்டு**

# *New Bill Passed for the Safety of Women and Children*




The Tamilnadu Hostels and Homes for Women and children will ensure the safety of Women and children staying away from home.

The Recently introduced bill states that any one who running the hostels, lodging houses and homes for women and children must get a proper license from the District collector.

The enlisting hostels. lodging houses and homes can get permission within Two months of period.

The bill also Stress the need to appoint "Women Residnet manager" to see the regular functioning of the home, houses and lodges.

The Manager is responsible for the safety security and ensure that the matter are not abused.

# அசத்தும் சிறுவன் - அனக்

## 6 வயது சிறுவன் +2 பாடமெடுக்கும் அதிசய சிறுவன்

பீகார் மநிலத்தின் கிழக்கு சாம்ரான் மாவட்டத்தை சேர்ந்த அனக் அனன்யா 6வயது சிறுவன் இரண்டாம் வகுப்பு படிக்கம் மாணவன் பிளஸ் 2 விற்கான அனைத்து பாடங்களையும் மாணவர்களுக்கு பாடம் நடத்தும் அளவிற்கு, அசத்துகிறான். அவன் பள்ளியில் படிக்கும் மாணவர்களுக்கு சந்தேகங்களை தீர்க்கும் வகையில் உதவி செய்கிறான்.

இரண்டு வயதில் அறிவியலையும், கணிதத்தையும், படிக்கத்துவங்கிய அவன் மேலும் 6,7 ஆம் வகுப்பு பாடங்களை கற்கத் தொடங்கி பின்பு +2 வகுப்பு பாடங்களை கற்றுத் தேறிவிட்டான். இயற்பியல், வேதியியல், உயிரியல் மற்றும் கணிதம் ஆகிய பாடங்களிலும் தனித்திறமை பெற்றுள்ளான்.

## RTE புதிய விவரங்கள்

# RTE இடம் தராத தனியார் பள்ளிகளுக்கு நோட்டீசு..

| | |
|---|---|
| தமிழகத்தில் மொத்தமுள்ள தனியார் பள்ளிகள் | 11462 |
| தொடக்க கல்விதுறையில் உள்ளவை | 7130 |
| 25% RTE இலவச கல்வித்திட்டதில் இலவச சேர்க்கை செய்த பள்ளிகள் | 5441 |
| 25% இலவச கட்டாய கல்வி சட்டத்தில் கீழ் மாணவர்களை சேர்க்காத பள்ளிகள் | 1937 |

இந்த 1937 பள்ளிகளக்கு கல்வித்துறை அதிகாரிகள் எச்சரிக்கை செய்துள்ளனர்.

| | |
|---|---|
| இந்த ஆண்டு 2014-15 சேர்க்கபட்ட மாணவர்களின் மொத்த எண்ணிக்கை | 89382 |

இந்த 25% இலவச கல்வி சேர்க்கை சென்ற ஆண்டை விட அதிகம் என்பதை கல்வித்துறை கணக்கில் கொள்ள வேண்டும். ஏற்கனவே RTE 25% இலவச சேர்க்கைக்கு 2012-13, 2013-14க்கான பணமோ அல்லது காசோலையே பெறாமல் 2014-15ல் 89382 பேருக்கு 25% இலவச கல்வியில் சேர்க்கை செய்திருப்பது தனியார் பள்ளிகளை பாராட்ட வேண்டும். மூன்று ஆண்டுகள் RTEக்கு பணமே கொடுக்காத நிலையில், பள்ளிக்கல்வித்துறை இப்போது தான் 2013-14க்கு Claim form கொடுத்திருக்கிறார்கள். 2012-13 எப்படி விட்டுவிட்டனர். முறையாக சுவநு இலவச சேர்க்கைக்கான பணம் தரப்படுமானால் தொடர்ந்து இந்த 25% சேர்க்கையை சேர்த்து அரசோடு ஒத்துழைக்க தயராக உள்ளன தனியார் பள்ளிகள் என்பதையும் உறுதி செய்கிறோம்.